செ.வெ.எண்:11 நாள்:05.9.2021

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதினை தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு.ஏ.கே.எஸ்.விஜயன் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் ஆசிரியர்களுக்கு வழங்கும் விழா.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதினை தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு.ஏ.கே.எஸ்.விஜயன் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எம்.செல்வராசு, முன்னிலையில் ஆசிரியர்களுக்கு வழங்கும் விழா நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி தெரிவித்ததாவது:

முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்கள் 1997ஆம் ஆண்டு பள்ளிக் கல்வித்துறை சார்பில் வழங்கப்படும் நல்லாசிரியர் என்ற விருதினை டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருது என நல்லாசிரியர்களுக்கு வழங்கினார். ஆசியரியர்கள் குற்றங்களை நீக்குபவர் என்ற பாராட்டை பெற்றவர்கள். இந்த விருதானது வரும் ஆண்டு முதல் ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாது ஆசிரியர்களை வழிநடத்தும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கும் வழங்கப்படும் என தமிழக முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இக்கொரோனா காலக்கட்டத்தில் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் இணைய வழியில் கல்வி பயிற்றுவித்து வருகிறார்கள். இது மிகப்பெரிய சவாலாக இருந்தாலும் இணைய வழி கல்வி பயிற்றுதலிலும் ஆசிரியர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். இணைய வழியில் ஆசிரியர்கள் கல்வி பயிற்றுவிக்கும் போது மாணவ, மாணவிகளிடம் கைப்பேசியை இணைய வழி கல்விக்காக மட்டுமே பயன்படுத்தவும், மற்ற நேரங்களில் கைப்பேசி பயன்படுத்துவதை தவிர்க்கவும் என்றும் மாணவர்களின் எதிர்கால கனவை கல்வியால் மட்டுமே நிறைவேற்ற முடியும் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும் எனதமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:

கல்விக்கும், தமிழுக்கும் புகழ் சேர்க்கின்ற நாகப்பட்டினம் மாவட்டத்தில் மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்குகிற கடமை ஆசிரியர்களுக்கு இருக்கிறது. ஆசிரியர் தினமாக கொண்டாடப்படும் இன்றைய தினத்தில்

டாக்டர்.இராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருது சிறந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவர்களையும் நல்ல புத்திசாலியாக உருவாக்குகிற பொறுப்பு ஆசிரியர்களுக்கு உள்ளது. போட்டித்தேர்வில் பங்கேற்க மாணவ, மாணவிகளை ஊக்கப்படுத்த வேண்டும். மாணவர்களை பிற மாணவர்களுடன் ஒப்பிடுதலை தவிர்த்து ஆசிரியர்கள் ஊக்கப்படுத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து திருப்பூண்டி வடக்கு அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் ஆறு.துரைகண்ணன், நாகப்பட்டினம் தேசிய மேனிலைப்பள்ளி முதுகலையாசிரியர் வீ.இராஜராஜன், ஆழியூர் அரசு மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் நீ.சிவக்குமார், வேதாரண்யம் சி.க.சு.அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர் சி.நாகராஜன், காடம்பாடி நகராட்சி நடுநிலைப் பள்ளி இடைநிலை ஆசிரியர் க. விஜய சாமுண்டீஸ்வரி, அத்திப்புலியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் இரா.தமிழ்ச்செல்வி ஆகிய ஆசிரியர்களுக்கு டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருதினை தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜெ.முகமது ஷா நவாஸ், மாவட்டச் செயலாளர் திரு.என்.கௌதமன், ஒன்றியக்குழுத் தலைவர் செல்வி.அனுசியா, முன்னாள் அமைச்சர் திரு.உ.மதிவாணன், முதன்மை கல்வி அலுவலர் திரு.க.மதிவாணன், மாவட்ட கல்வி அலுவலர் திரு.மீ.உதயகுமார், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**